(பதிப்புரிமையுடையது)

உ

சிவமயம்



விவேகானந்த சபை கொழும்பு

அகில இலங்கை



11 சைவசமய பாடப்பரீட்சை : 2022

தரம் பதினொன்று

nselva.com

கால அளவு	3.00 மணி

புள்ளிகள் : 100

இல.	
மாணவர் சுட்டெண்:	

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. பகுதி ஒன்றிற்கு இத்தாளிலேயே விடை எழுதுக.

பகுதி - I

1. மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1. கடவுள் பற்றி கூறும் எமது சமயத்தின் சிறப்பு நூல் எது?
   1) வேதம் 2) ஆகமம் 3) தேவாரம் 4) திருவாசகம்
2. "தீது ஒரீஇ நன்றின் பால் உய்வது அறிவு" என்று கூறியவர் யார்?
   1) திருவள்ளுவர் 2) நாவலர் 3) ஔவையார் 4) திருமூலர்
3. ஊருணி என்பதன் பொருள் என்ன?
   1) ஊருக்குள் வாழும் ஊர்வன 2) ஊருக்குள் உள்ள ஈகையாளர்
   3) ஊருக்குள் உள்ள ஆலயங்கள் 4) ஊருக்கு பொதுவான நீர் நிலை
4. பிரபவம் முதல் அட்சயம் வரையுள்ள ஆண்டுகளின் எண்ணிக்கை எது?
   1) 12 2) 30 3) 60 4) 365
5. ஆருத்திரா தரிசனம் இடம் பெறுவது எப்பொழுது.
   1) மார்கழித் திருவாதிரை 2) ஆவணி பௌர்ணமி
   3) பங்குனித் திங்கள் 4) கார்த்திகைப் பூரணை
6. திரிபுண்டரமாக திருநீறு அணியத் தகுதியுடையோர் யார்?
   1) சைவ சமயிகள் மட்டும் 2) சமயதீட்சை பெற்றோர் மட்டும்
   3) விரதமிருப்பவர்கள் மட்டும் 4) பிராமணர்கள் மட்டும்
7. அகத்தே அணியும் சிவ சின்னம் எது?
   1) விபூதி 2) உருத்திராக்கம் 3) பஞ்சாட்சரம் 4) சந்தனம்
8. இறந்த மூதாதையரின் ஆத்மாக்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
   1) பிதிர்கள் 2) ஆன்மாக்கள் 3) அஸ்தி 4) பிண்டம்
9. சிவனின் நான்கு முகங்களிலிருந்து தோன்றியது எது?
   1) வேதம் 2) ஆகமம் 3) காமிகம் 4) வாதுளம்
10. திருப்புகழ் முருக துதியோடு வேறு எக்கடவுளின் துதியாகவும் அமைகிறது?
    1) சிவன் 2) உமாதேவியார் 3) விநாயகர் 4) விஷ்ணு
11. "பச்சை மா மலை போல் மேனியை" உடையவர் யார்?
    1) திருமால் 2) பிரம்மா 3) சிவன் 4) சூரியன்
12. சிவரகசிய காண்டம் எத்தனை காண்டங்களையுடையது?
    1) 5 2) 7 3) 9 4) 3
13. குங்கிலியக்கலய நாயனார் எந்நெறியில் நின்று இறையருள் பெற்றார்?
    1) சரியை 2) கிரியை 3) யோகம் 4) ஞானம்
14. சிவாகமங்கள் கூறும் கோயிற் கிரியைகள் எத்தனை வகைப்படும்?
    1) 9 2) 7 3) 5 4) 3

15. பின்வரும் பெயர்களுள் சுந்தரரை குறிக்கும் பெயரல்லாதது எது?
1) தம்பிரான் தோழர் 2) ஆளுடைய அரசு 3) வன்றொன்டன் 4) ஆலால சுந்தரர்

16. யார் பொருட்டுச் சிவபெருமானே கூலியாளாக வந்து அணைகட்டி பிரம்படி பட்டார்?
1) அப்பர் 2) சம்பந்தர் 3) சுந்தரர் 4) மாணிக்கவாசகர்

17. அருணந்தி சிவாச்சாரியாரின் தலை மாணாக்கர் யார்?
1) மறைஞான சம்பந்தர் 2) திருஞான சம்பந்தர்
3) உமாபதி சிவாச்சாரியார் 4) மெய்கண்டதேவர்

18. இறவாமற் பிறவாமல்..... என்ற திருப்புகழ் எத் தலத்திற்குரியது?
1) திருப்பரங்குன்றம் 2) கதிர்காமம் 3) திருத்தணிகை 4) மாவிட்டபுரம்

19. கார்த்திகை மாத மக நட்சத்திரத்தன்று குருபூசைக்குரியவர் யார்?
1) அருணகிரிநாதர் 2) ஆறுமுகநாவலர்
3) உமாபதி சிவாச்சாரியார் 4) விவேகானந்தர்

20. ஆன்மாவை ஈடேற விடாமல் கட்டி வைத்திருப்பது எது?
1) பாசம் 2) பதி 3) பசு 4) புண்ணியங்கள்

21. கந்தபுராணம் பாடியவர் யார்?
1) அகத்தியர் 2) அருணகிரிநாதர் 3) கச்சியப்ப சிவாச்சாரியார் 4) குமரகுருபரர்

22. சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியவர் யார்?
1) சேர். பொன். இராமநாதன் 2) விவேகானந்தர்
3) ஆறுமுகநாவலர் 4) பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

23. சாய்ந்த சிவலிங்கத்தை தன் கழுத்தில் கயிறு கட்டி இழுத்து நிமிர்த்தியவர் யார்?
1) குங்கிலியகலய நாயனார் 2) திரு நீல கண்ட நாயனார்
3) மெய் பொருள் நாயனார் 4) இயற்பகை நாயனார்

24. மண்டலாபிஷேகம் எத்தனை நாட்கள் நடைபெறும்?
1) 365 2) 38 3) 48 4) 68

25. சுந்தரரை தேவர்கள் எதில் ஏற்றி கயிலைக்கு அழைத்து சென்றார்கள்?
1) குதிரை 2) மயில் 3) காளை 4) யானை

26. ஆனிமாத மக நட்சத்திரத்தன்று இறைவனோடு ஒன்றி பேரின்ப வாழ்வு பெற்றவர் யார்?
1) திருநாவுக்கரசர் 2) திருஞானசம்பந்தர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசகர்

27. சுவாமி மலை எம் மரங்களால் சூழப்பட்டது என அருணகிரிநாதர் கூறுகின்றார்?
1) வேம்பு மரம் 2) மா மரம் 3) அரசமரம் 4) பலாமரம்

28. திருநீறு பூசக்கூடிய திசைகள் எவை?
1) வடக்கு, கிழக்கு 2) வடக்கு, தெற்கு 3) கிழக்கு, மேற்கு 4) மேற்கு, வடக்கு

29. திருவண்ணாமலையில் சிறப்பாக கொண்டாப்படுவது எது?
1) தைப் பொங்கல் பண்டிகை 2) சிவராத்திரி
3) கார்த்திகை விளக்கீடு 4) கந்தசஷ்டி திருவிழா

30. தவம் செய்பவர்களிடம் காணப் பெறும் பெரும் ஆற்றல் என்ன?
1) வரம் அளித்தல் 2) சாபம் அளித்தல்
3) ஆணவம் தவிர்த்தல் 4) பசியைப் பொறுத்தல்

31. திருமாலின் அச்சுதன் என்னும் நாமம் குறிப்பது என்ன?
1) எங்கும் நிறைந்தவன் 2) என்றும் அழிவற்றவன்
3) அவதாரம் எடுப்பவன் 4) எல்லாம் அறிந்தவன்

32. ஆலயமானது இயற்கை அனர்த்தத்தால் அழிந்து போன இடத்தில் முன் போல் பிரதிஷ்டை செய்தல் என்பது என்ன?
1) அநாவர்த்தனம் 2) ஆவர்த்தனம் 3) புனராவர்த்தனம் 4) அந்தரிதம்

33. சக்தி என்னும் சொல்லுக்கு பொருள் யாது?
1) வல்லமை 2) உமாதேவியார் 3) சிவபெருமான் 4) வீரபத்திரர்

பின்வரும் பாடல்களுள் பொருத்தமான இணைப்பை தெரிவுசெய்க

இறைவன்	துதிப்பாடல்
A சண்டேசுவர்	F பரமனை மதித்திடாப்
B சரஸ்வதி	G அருவமும் உருவமுமாகி
C வைரவக்கடவுள்	H மனாதிகளுக்கு எட்டாத
D சுப்பிரமணியக்கடவுள்	I அடைந்தவியுண்டிடு
E வீரபத்திரக் கடவுள்	J தாவதுமுலகெலம்

34. கல்வித் தெய்வம் பற்றிய சரியான தொடர்பு எது?
1) A I 2) B J 3) C F 4) D G

35. கார்த்திகை பெண்களால் விளக்கப்பட்டவர் தொடர்பான இணைப்பு எது?
1) E J 2) A F 3) D G 4) B H

36. போசனத்திற்கு பின் யாது செய்யத் தக்கது?
1) சயனித்தல் 2) உபாத்தியாத்தியாயரின் கல்வி கற்றல்
3) தியானித்தில் இருத்தல் 4) தாம்பூலம் தரித்தல்

37. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனஞ் செய்தல் ஆகாது?
1) கோயில் மணி ஒலித்த பின்பு 2) அபிஷேகம் நிவேதனம் நடக்கும் பொழுது
3) சுவாமி வீதி வலம் வரும் போது 4) விபூதி பிரசாதம் பெறும் பொழுது

38. வாழையிலையை போசனத்திற்குரிய பாத்திரமாக எப்படிப் போடல் வேண்டும்.
1) அடியின் அடிப்பாகம் வலப்பக்கத்திற்கு பொருந்தும்படி
2) அடியின் அடிப்பாகம் இடப்பக்கத்திற்கு பொருந்தும்படி
3) அடியின் முற்பாகம் வலப்பக்கத்திற்கு பொருந்தும்படி
4) அடியின் முற்பாகம் இடப்பக்கத்திற்கு பொருந்தும்படி

39. ஸ்நானஞ் செய்யத் தக்க நீர் நிலை அல்லாதது எது?
1) ஓடை 2) மடு 3) கேணி 4) களப்பு

40. நித்திரை விட்டெழும் போது சைவர்கள் சொல்லக் கூடிய இறைமொழி எது?
1) ஓம் சரவணபவா 2) சிவசிவ 3) நாமோ நாராயணா 4) மேன்மை கொள் சைவ நீதி

(40 புள்ளிகள்**)**

பகுதி - II

1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பரம்பொருளைக் குறிப்பதற்குப் பயன்படும் தமிழ்ச்சொல் எது?
2. ஒரு திதியின் அரைப்பங்கு எவ்வாறு அழைக்கப்படும்?
3. சிவனுக்குரிய விரதங்களுள் மிகவும் விசேடமான விரதம் எது?
4. விஷ்ணு ஆலய தீபம் அமையப்பெறும் நட்சத்திரம் எது?
5. உருத்திராக்க மணிகள் காணப்படக்கூடிய நிறங்கள் 2 தருக?
6. முருகன் வள்ளியை அடைய விநாயகர் எவ் வடிவில் வந்து உதவி செய்தார்?
7. கந்தரலங்காரத்தில் வரும் கிலேசம் என்பதன் பொருள் யாது?
8. சயந்தன் முதலான தேவர்களை மீட்க முருகன் அனுப்பிய படைத் தளபதியின் பெயர் என்ன?

(8 x 2 = 16 புள்ளிகள்**)**

2. பின்வரும் திருப்பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது எழுதி அதன் பொழிப்புரையையும் எழுதுக.

1. "பண்டைவல் வினையினால் ....." 2. "பொய்யுரைநூல் சில"
3. "வறந்திரு பொய்கைமுன் ....." 4. "கந்தமொருயிர் ....."
5. "தாவறு முலகெலாந் ....." **(5 x 2 = 10** புள்ளிகள்**)**

3. பின்வரும் குறட்பாக்களுள் எவையேனும் நான்கினை எழுதுக.

1. "பல்லார் முனியப் பயன் இல ....." 2. "தீவினையார் அஞ்சார் ....."
3. "கைம்மாறு வேண்டா ....." 4. "வறியார்(கு) ஒன்(று) ....."
5. "சொல்லுக சொல்லிற் பயனுடைய ....." **(4** புள்ளிகள்**)**

பகுதி - III

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. "பட்ட கட்டையிற் பகற் குருடு போகிறது...."

அ. புறச்சந்தான ஆசாரியர்கள் இருவரின் பெயரைக் குறிப்பிடுக.

ஆ. (i) ஆவணிமாத உத்தர நட்சத்திரத்தில் முத்தியடைந்த சந்தான குரவர் யார்?
(ii) "கொற்றவன் குடி முதலியார்" என அழைக்கப்பட்ட சந்தான குரவர் யார்?

இ. திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்த சந்தான குரவர் செய்த அற்புதங்கள் இரண்டினை விளக்குக. **(3+3+4 =10** புள்ளிகள்**)**

2. "நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கை தொழுவேன்"

அ. திருத்தொண்டர் தொகையை சுந்தரர் பாட இறைவன் எடுத்துக்கொடுத்த அடி யாது?

ஆ. (i) சுந்தரர் பதிகம் பாடிய ஈழத்து திருத்தலம் எது?
(ii) சுந்தரரின் குரு பூசைத் தினம் எது?

இ. சுந்தரருக்காக இறைவன் நிகழ்த்திய அற்புதங்கள் இரண்டினை விளக்குக.
(2+4+4 =10 புள்ளிகள்**)**

3. "ஆடு மயிலினீலேறி யமர்கள் சூழ வலம் வருமிளையோனே....'

அ. (i) மேலுள்ள துதி இடம் பெறும் நூல் எது?
(ii) இப்பாடலைப் பாடியவர் யார்?

ஆ. சிவ பெருமான் தன் தலையில் சூடியவைகளில் இரண்டினைக் குறிப்பிடுக?

இ. இப்பாடலில் கூறப்பட்ட திருமால் சீதையைக் காப்பாற்ற செய்த அற்புதச் செயலை விளக்குக. **(3+3+4 =10** புள்ளிகள்**)**

4. "வேத மொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்"

அ. (i) மன்னுமாமலை மகேந்திரப் அதனில் சொன்ன ஆகமம்" என்று கூறும் நூல் யாது?
(ii) இப்பாடல் யாரால் பாடப்பட்டது?

ஆ. இவ் ஆகமங்கள் உணர்த்தும் நாற்பாதங்கள் எவை? இதில் ஆகமங்கள் எப்பாதத்தை மையமாகவுடையது?

இ. ஆகமங்களை சிறப்பு நூல் என கொள்ளப்படுவதற்கான காரணத்தை தருக?
(3+3+4 =10 புள்ளிகள்**)**

5. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

அ. விரதங்கள் ஆ. பஞ்சாங்கம் இ. ஒப்புரவு ஈ. குரவர்கள்

உ. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(5x2 =10 புள்ளிகள்**)**